

கைத்தறி மற்றும் துணிநூல்துறைஅமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி முன்னிலையில் ஆற்காடு மேற்கு ஒன்றிய செயலாளர் ஏ.வி. நந்தகுமார் தலைமையில் கத்தியவாடி கிராமத்தில் இருந்து பா.ம.க. கிளைச் செயலாளர் ராஜா மற்றும் ரோகித் குமரன், இராமதாஸ், நவீன்குமார், பாலாஜி, இளையராஜா, பார்த்திபன், லோகேஷ், நாம் தமிழர் கட்சியில் இருந்து பிரபாகரன், அருணாசலம், படவேட்டான் பால், துரை, முனியாண்டி, டெல்லி ஆகியோர் அக்கட்சியில் இருந்து விலகி தி.மு.க.வில் இணைந்தார்கள். அவர்கள் அனைவருக்கும் கருப்பு சிவப்பு வேட்டி அணிவித்து வரவேற்றார். இதில் ஒன்றிய பொருளாளர் கே.எல்.வீரமணி, துணைச் செயலாளர்கள் ஜி.கே.மூர்த்தி, விஜய்ரங்கன், அமுதா ஆறுமுகம், மாவட்டப் பிரதிநிதிகள் பி.ஜெயபிரசாத், டி.ஜெயபிரகாஷ், பி.சிவா, ஒன்றிய இளைஞர் அணி ஏ.வி.என். ஸ்ரீநாத், தி.அ.மக்சூர் அகமத், கிளைக் கழக நிர்வாகிகள் சந்தானம், சேகர், ஞானப்பிரகாசம், இராஜேந்திரன், வேலு, விஜயன், ஜெயபிரகாஷ், ஒன்றிய சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் சுரேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### நெல்லை மாவட்டம் – கங்கைகொண்டான் பகுதிகளில் அமைந்துள்ள

# தொழிற்சாலைகள் - டாட்டா சோலார் நிறுவனத்தில் ஆய்வு!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மேற்கொண்டார்!

*நெல்லை, பிப். 27-*

நெல்லை மாவட்டம் கங்கை கொண்டான் சிப்காட் வளாகத்தில் உள்ள அந்தோணி ரெசிடென்சி கூட்டரங்கில் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், சிப்காட் தொழில் நண்பன் சந்திப்பு, நிகழ்ச்சி தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் அரசு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண் இயக்குனர் வே. விஷ்ணு, சிப்காட் மேலாண்மை இயக்குனர் டாக்டர் கே.செந்தில்ராஜ், நெல்லை மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நெல்லை மாவட்டம் கங்கைகொண்டான் பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலைகளையும், பணிகள் நடந்து வரும் டாட்டா சோலார் நிறுவனத்தையும், போஸ் நிறுவனத்தையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து அங்குள்ள தனியார் விடுதி கூட்டரங் கில் தொழிற்சாலைகளின் நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார். அவர்களின் கோரிக்கைகளை கேட்டு அறிந்தார். தொழில் முனைவோர்கள் தங்களுக்கு கிடைத்துள்ள நன்மைகள் குறித்து தமிழ்நாடு அரசுக்கு நன்றி கூறினார்கள்.

பின்னர் அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தொழிற்சாலை நடத்துபவர்களின் குறைகள், கோரிக்கைகள் கேட்டறியப்பட்டுள்ளது. தேவையான நடவடிக்கைகள் உடனுக்குடன் எடுக்கப்படும். ஒவ்வொரு திங்கட்கிழமையும் தொழில் நடத்துபவர்களுக்கான குறை தீர்க்கும் முகாம்கள் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆய்வு செய்த தொழிற்சாலைகளில் அதிகம் பெண்கள் பணி புரிகின்றனர். டாட்டா சோலார் நிறுவனத்தில் 88 சதவீதம் பெண்களும், போஸ் நிறுவனத்தில் 75 சதவீதம் பெண்களும் பணியாற்றுகின்றனர். இந்திய அளவில் தொழிற்சாலைகளில் 43 சதவீதம் தமிழ்நாட்டுப் பெண்கள் பணியாற்றுகின்றனர். தமிழ்நாடு அரசின் நடவடிக்கைகளாலேயே இது போன்ற நிலை சாத்தியமாகி உள்ளது.

கங்கைகொண்டான் சிப்காட் விரிவாக்கம் செய்ய நிலங்களை தாமாக முன் வந்து தரக்கூடிய மக்களிடம், விவசாயிகளிடம் அதற்கான உரிய விலை கொடுக்கப்பட்டு சிப்காட் விரிவாக்கம் செய்யப்படும். சிப்காட்டில் பணிகள் நடந்து வரும் டாட்டா சோலார் நிறுவன பணிகள் அடுத்த இரண்டு மாதங்களில் நிறைவடைய வாய்ப்புள்ளது. புதிதாக உருவாக உள்ள தொழிற்சாலைகளை முதலமைச்சர் அவர்கள் திறக்க வாய்ப்பு உள்ளது.

நாங்குநேரி சிறப்பு பொருளாதார மண்டலம் அதில் சில சட்ட ரீதியான பிரச்சினைகள் உள்ளது. அதனை சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விண்வெளி ஆய்வு பாதுகாப்புத் துறை ஆகியவற்றின் தேவையான உபகரண தொழிற்சாலைகளில் தமிழ்நாடு மிகப் பெரிய வளர்ச்சியே விரைவில் எட்டும்.

புதிய தொழிற்சாலை அமைப்பதற்கான நிறுவனங்களுடன் ஒப்பந்தம் கடந்த மாதம் தான் போடப்பட்டது. இம்மாதமே பணிகள் தொடங்குவது சிறப்பு வாய்ந்ததாகும் 16,000 ம் கோடி முதலீட்டில் தொழிற்சாலை அமைய உள்ள நிலையில் முதற்கட்டமாக 4000ம் கோடி முதலீடு தூத்துக்குடியில் செய்யப்படுகிறது. இதன்மூலம் 10 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களுக்கு நேரடியாக வேலை வாய்ப்பு கிடைக்கும். இதனைத் தொடர்ந்து அந்த நிறுவனத்துக்கு தேவையான துணை நிறுவனங்களும் அங்கே வருவதற்கான வாய்ப்பு உள்ளது. இதன்மூலம் அந்த பகுதி முழுமையாக வளர்ச்சியடையும், நெல்லை மாவட்டத்திற்கும் புதிய தொழிற்சாலைகள் வர வாய்ப்பு உள்ளது.

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று 3ஆண்டுகளில் 10 லட்சம் கோடி முதலீடுகள் தமிழகத்திற்கு வந்துள்ளது. 31 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது.

இவ்வாறு அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா தெரிவித்தார்.

இதில் சிப்காட் பொது மேலாளர் சந்திரமோகன், மதுரை மண்டல செயற்பொறியாளர் தம்பிரான் தோழன், திட்ட அலுவலர் சிப்காட் நசீர் அகமது, ஏ.ஆர்.சிப்காட் செல்வம், சிப்காட் கண்காணிப்பு பொறியாளர் (சென்னை) தேவஇரக்கம் உட்பட தொழில் முதலீட்டாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.




# கலைஞர் நினைவிடம் கண்டு சிலிர்த்தேன்!

## கவிப்பேரரசு வைரமுத்து உணர்ச்சிப் பெருக்கு!




முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம் கண்டு களித்தது குறித்து, கவிப்பேரரசு வைரமுத்து தமது ட்விட்டர் பதிவில், "கலைஞர் நினைவிடம் கண்டு சிலிர்த்தேன்" என்று உணர்ச்சிப் பெருக்குடன் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் தமது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளதாவது:-

**கலைஞர் நினைவிடம்**
**கண்டு சிலிர்த்தேன்**

**கலைஞரின்**
**கையைப் பிடித்துக்கொண்டே**
**கலைஞர் நினைவிடம்**
**சுற்றிவந்த உணர்வு.**

**இது தந்தைக்குத்**
**தனயன் எழுப்பிய மண்டபமல்ல**
**தலைவனுக்குத்**
**தொண்டன் கட்டிய தாஜ்மஹால்**

**"இப்படியோர் நினைவிடம்**
**வாய்க்குமென்றால்**
**எத்தனை முறையும் இறக்கலாம்"**

**கலைஞர் கண்டிருந்தால்**
**கவிதை பாடியிருப்பார்**

**உருவமாய் ஒலியாய்**
**புதைத்த இடத்தில்**
**கலைஞர் உயிரோடிருக்கிறார்**
**உலகத் தரம் - நன்றி தளபதி.**

இவ்வாறு கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

### தமிழ்நாடு முதல்வரின் பிறந்தநாள் பரிசாக

# நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கு 40 வெற்றியைக் கொண்டு வருவோம்!

## கோவையில் தி.மு.க. தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன் சூளுரை!

*கோவை, பிப். 27 -*

தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்தநாள் பரிசாக நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கு 40 வெற்றியை கொண்டு வருவோம் என கோவையில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் உரையாற்றிய தி.மு.க. தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன் சூளுரைத்தார்.

கோவை தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட குறிச்சி வடக்கு பகுதிக் கழகம் சார்பில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, அலுவலகம் திறப்பு விழா, நற்சான்றிதழ் வழங்கும் விழா ஆகிய முப்பெரும் விழா பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.ஏ.காதர் தலைமையில் குறிச்சி பிரிவு பகுதியில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், தி.மு.க. தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன் கலந்து கொண்டு குறிச்சி வடக்கு பகுதிக் கழக அலுவலகத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

அப்போது, "தி.மு.க. தலைவரும் - தமிழ்நாடு முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் பரிசாக 40க்கு 40 வெற்றியைக் கொண்டு வருவோம். இந்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் நிச்சயம் வெற்றி பெறுவோம்" என சூளுரைத்தார்.



தொடர்ந்து விழாவில், தளபதி பெண்கள் பயிற்சி பட்டறையில் பயின்றவர்களுக்கு தையல் இயந்திரம், சான்றிதழ் வழங்கப்பட்டது.

விழாவில், துணை மேயர் வெற்றிச்செல்வன், மண்டலத் தலைவர் தனலட்சுமி ரங்க நாதன், தெற்கு குறிச்சி தெற்கு பகுதிச் செயலாளர் கார்த்திகேயன், பொதுக்குழு உறுப்பினர்கள் குறிச்சி பிரபாகரன், ஆச்சிப்பட்டி பாலு, நாகராஜசோழன், சிறுபான்மை நல உரிமைப் பிரிவு பிலிப், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன், தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், பொள்ளாச்சி எம்.பி. சண்முகசுந்தரம், மாவட்ட துணைச் செயலாளர் கனிமொழி, மகளிரணி அமைப்பாளர் கமலா, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எஸ்.வி.டி. பிரபு, எம். முத்தலி, பழனிச்சாமி, டிஸ்கோ ஹம்சா உள்பட பலர் கலந்து கொண்டனர்.




நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்களின் 71வது பிறந்தநாள் விழா மாபெரும் பொதுக்கூட்டம் நெல்லை மத்திய மாவட்ட அவைத் தலைவர் முருகன் தலைமையில் நடைபெற்றது. நெல்லை பகுதிச் செயலாளர் நமச்சிவாயம் வரவேற்புரையாற்றினார். இந்நிகழ்வில் தலைமைக் கழகப் பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி பங்கேற்று சிறப்புரையாற்றினார். உடன் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன், தொகுதி பார்வையாளர்கள் ஹெலன் டேவிட்சன் (பாளை) வசந்தம் ஜெயக்குமார் (நெல்லை) சுப.சீதாராமன்,பெருமாள், விஜிலாசத்யானந்த்,பேச்சி பாண்டியன், துணை மேயர் ராஜ், நமச்சிவாயம், சுப்பிரமணியன், அன்டன் செல்லத்துரை, அப்துல் கையும், அலிப்மீரான் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.